[20th January 1961

வார்களாதலால், இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது எத்தனையோ முறை பரிசீலனை செய்யப்பட்டது. முதலில் தண்ணீர் கிடையாது. இரண்டாவது கட்டினால் செலவு அதிகம் ஆகிறது. மூன்றாவது, ஏரிகள் இருந்தால் நிறப்பலாம் என்றாலும் ஏரிகளும் இல்லை. ஆகையால் மேற்கொண்டு இதைப் பரிசிலனை செய்வது பயனற்றது என்று கைவிடப்பட்டது.

Package Deal Scheme (Thanjavur)

* 40-A. Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the total amount to be spent under the Package Deal in Thanjavur district this year;

(b) the amount expected as contribution from the Centre; and

(c) the nature and extent of the aid to be received from the Ford Foundation Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Rs. 23·25 lakhs.*

(b) Rs. 4·82 lakhs.*

(c) A grant of Rs. 15·37 lakhs. *

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இதுவரையில் இந்தத் திட்டத்தின்கீழ் கடனுகப் பணமும் உரமும் எவ்வளவு வழங்கப்பட்டது ? நிலச் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது ? நிலம் இல்லாது உழவு வேலை செய்யக் கூடியவர்களுக்கு—கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸுக்கு—எவ்வளவு கொடுக்கப்பட்டது ? கல்ட்டிவேடிங் டெனண்ட்ஸ் என்பதை எந்த முறையில் எப்படி நிர்ணயிக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவரங்களை யெல்லாம் அளிப்பதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்தத் திட்டத்தின் கீழ் தஞ்சை ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட உரம் முதலியன வெளி ஜில்லாக்களுக்கு கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளனவா ? அப்படியானல் அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி வழங்கப் படுகின்ற உரம் வெளி ஜில்லாக்களுக்குக் கொண்டு போகப் படுகிறது என்று அதிகமாகப் புகார் இல்லை. ஒன்றிரண்டு விஷயத்தில் அந்த மாதிரியும் நடந்திருக்கலாம். பற்றாக்குறை

* These figures are tentative and are based on present estimates.

20th January 1961]

இருக்கும்போது அப்படி நடக்கலாம். ஜில்லா விட்டு ஜில்லா கொண்டு போகப்படுவதைத் தடுக்க தடை விதிக்க வேண்டு மென்று ஜில்லா கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். இப்போது ராஜ்யத்தை விட்டு ராஜ்யத்திற்குக் கொண்டுபோவதற்குக்கூட தடை கிடையாது. மத்தியப் பிரதேசத்திலிருந்து வந்துகொண்டி ருக்கிறது. ராஜ்யத்தை விட்டு ராஜ்யம் கொண்டுபோவதைப் பற்றி பார்க்கலாம் என்று சொன்னார்கள். ஜில்லா விட்டு ஜில்லா கொண்டு போவதைத் தடை செய்யும் உத்தேசம் இப்போது இல்லை.

Sri K. SATTANATHA KARAYALAR: இங்கு மொத்தம் எவ்வளவு உரம் வழங்கப்பட்டது? எக்கருக்கு என்ன வீதசாரப் படி கொடுக்கப்பட்டது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அதைப்பற்றியும் தனியாகக் கேள்வி வேண்டும்.

Sri R. KRISHNASAMI NAIDU: இந்த தீவிர சாகுபடித் திட்டம் தஞ்சையிலுள்ள எல்லா தாலுகாக்களிலும் எல்லாப் பகுதி களிலும் அமுலில் இருக்கிறதா? அல்லது ஒவ்வொரு தாலுக்கா விலும் ஒவ்வொரு பகுதி எடுக்கப்பட்டிருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: தஞ்சை வட்டார வளர்ச்சிப் பிராந்தியங்களில் 100-க்கு 20 பங்கு முதல் வருஷத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

Sri A. GOVINDASAMY: ரசாயன உரத்தோடு சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்தக் கூடிய உப்பையும் கலந்து விற்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எத்தனையோ கலப் படங்கள் நடக்கின்றன. இதுவும் நடந்திருக்கலாம். (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: இதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு இல்லையா?) தடுக்க வேண்டிய பொறுப்புத்தான், தடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

Sri A. VEDARATHNAM: சென்ற வருஷம் ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டதா? இல்லா விட்டால் பூர்ணமாகப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளும்? காலம் கடந்து உத்திரவு கிடைத்த காரணத்தினால் பூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. அடுத்த ஆண்டிலாவது அம்மாதிரி இல்லாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: நம் நாட்டிலே நம் ராஜ்யத்தில்தான் முதன் முதலாக இந்தத் திட்டம் சென்ற பசலியில் எடுத்துக்கொள்ளப்பட்டது. நிர்ணயம் செய்வதில்

கொஞ்சம் தாமதம் ஆகியது. இந்த ஆண்டு மதிப்பிட்டபடி கடன் தொகை, மற்ற இனங்கள் எல்லாம் பரிபூர்ணமாகச் செலவிடப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : நான் கேள்வி கேட்டதன் நோக்கம் ஜில்லாவிற்கு ஜில்லா உரம் போவதைத் தடுக்கவேண்டுமென்பதற்காக அல்ல. தஞ்சைக்கு ஒதுக்கப்பட்ட உரம் பூராவையும் அங்குள்ள விவசாயிகள் வாங்க முடியாமல் இருக்கின்ற காரணத்தினால்தான் வெளியிடங்களுக்குப் போகக் கூடிய நிலைமை இருப்பதால், எல்லா விவசாயிகளும் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏழை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கிறோம். வாங்க முடியாத நிலை ஒன்றும் இல்லை, வாங்கி வருகிறார்கள். பயன்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். சிலர் கடனுக்கு வாங்கி கள்ள மார்க்கெட்டில் விற்றிருக்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : தீவிர சாகுபடிக்காக வந்த உர வினியோகத்தில் உள்ள ஊழல்கள் சம்பந்தமாக அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்தாலும் 5, 10 ரூபாய்க்கு மேல் அபராதம் விதிக்க சட்டம் இல்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அம்மாதிரியில்லாமல் தீவிர நடவடிக்கை எடுக்கும் முறையில் சட்டம் கொண்டுவரப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் பிரச்சாரத்திற்காக வேண்டுமானால் ஊழல்கள் என்று சொல்லலாம். அப்படியொன்றும் இல்லை. தவறுகள் இருந்தால் அப்போதைக்கப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

MR. SPEAKER :—Questions are over.

[NOTE.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—POINT OF INFORMATION REGARDING A MATTER OF PRIVILEGE RAISED IN THE PREVIOUS SESSION.

9-30 a.m. SRI M. KALYANASUNDARAM : With your permission, Sir, I want to raise a matter in which all sections of the House will be interested. You will remember that during the last season the High Court issued a notice to you asking you to show cause why certain matter in the agenda shouuld not be prevented from being taken up for consideration. You were good enough to announce in this House that the High Court has no jurisdiction and you decided not to appear before the High Court. That decision was acclaimed by all sections of the House as a correct step in the direction of upholding the dignity of this House, without of course infringing the dignity of the High Court. Now so many months have passed. The High Court has passed official